# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com
www.bankubeutn.in


சுற்றறிக்கை எண்:142:2016 நாள்: 06.06.2016

அன்பார்ந்த தோழர்களே,

## அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 28வது மாநாடு சென்னையில் வரும் 2017 ஜனவரி 8 முதல் 11 வரை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மத்தியக் குழுக்கூட்டம் கடந்த 20.05.2016 அன்று சென்னையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு முன்னதாக, அனைத்து மத்தியக்குழு உறுப்பினர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளுக்கு ஆதரவாக ஸ்டேட் பாங்க் ஆப் பிகானிர் மற்றும் ஜெய்பூர் வங்கி முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர்.C.H.வெங்கடாச்சலம் அவர்கள் தில்லியில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்திய கவுன்சில் கூட்டத்தின் நிகழ்வுகளை எடுத்துரைத்தார். மத்திய தொழிற்சங்கங்கள் விடுத்துள்ள 02.09.2016 வேலைநிறுத்தம் குறித்தும், அதில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கலந்துகொள்ளவுள்ளது குறித்தும் விவரித்தார். ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளை ஸ்டேட் வங்கியுடன் இணைக்கும் முயற்சிக்கு எதிராக நடைபெறும் போராட்டம், அதற்கு அனைத்து வங்கி ஊழியர்களும் வழங்கவேண்டிய ஒத்துழைப்பு குறித்தும், வரும் 29.07.2016 அன்று ஒருநாள் அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு வங்கித் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு (United Forum of Bank Unions - UFBU) விடுத்துள்ள அழைப்பு குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர்.S.நாகராஜன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தோழர்.P.பாலகிருஷ்ணன் அவர்கள் கூட்டுறவுத் துறை குறித்தும், தோழர்.கலியுல்லா அவர்கள் கிராமிய வங்கிகளிலுள்ள பிரச்சனைகள்

குறித்தும், தோழர்.பொன்னுசாமி அவர்கள் வங்கி நிதி சேகரிப்போர் (Mini Deposit Collectors) குறித்தும் விரிவாக உரையாற்றினர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மாநாடு சென்னையில் 1954, 1973, 1984ம் ஆண்டுகளில் சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. வரும் 28வது மாநாட்டை 2017 ஜனவரி 8 முதல் 11 வரை சென்னையில் சிறப்பாக நடத்துவது குறித்து மத்தியக்குழு விரிவாக விவாதித்தது.

மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கான நிதி ஆதாரத்தை திரட்டுவதற்காக எழுத்தர்களிடமிருந்து ரூ.1000/-மும், துணைநிலை ஊழியர்களிடமிருந்து ரூ.500/-ம் லெவியாக பெற்றிட ஒருமனதாக மத்தியக்குழு முடிவு செய்தது. வங்கிவாரிச் சங்கங்கள் இந்தத் தொகையை நவம்பர் 2016க்கு முன்பாக உறுப்பினர்களிடமிருந்து பெற்று, அதனை சம்மேளனத்திற்கு செலுத்துவது என்று மத்தியக்குழு முடிவு செய்துள்ளது. எனவே நமது தோழர்கள் முழுமையாகவோ அல்லது இரண்டு தவணைகளாகவோ, உங்கள் பெயரையும், கிளையையும் குறிப்பிட்டு கீழ்க்கண்ட சங்கக் கணக்கில் செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம் :

**கணக்கு எண்: 47950 20700 07000**

மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் கலந்துகொள்ள தமிழகத்திலிருந்து 5000 ஊழியர்களை திரட்டிடவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**